தலும் பெறப்பட்டுள்ளது. ஹட்கோ கடன் மற்றும் மத்திய மாநில மானியம் கிடைக்கப் பெற்றதும் சங்கத்திற்கு பணம் விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 442, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

442—

கொடுமுடியில் மேம்பாலம் கட்டுதல்.

*4747 திருமதி கவிநிலவு தர்மராஜ்;

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஈரோடு—திருச்சி செல்லும் சாலையில் கொடுமுடியில் ஒரு மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைத்ததை முடித்து சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கின்ற தங்கத் தமிழகத்தின் சிங்கத் தலைவியினுடைய ஆட்சியிலே ''இல்லை'' என்ற சொல்லுக்கு இடமில்லாத சூழ்நிலையிலே கொடுமுடி நகரத்தினுடைய இந்த மேம்பாலம் மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி கொடுமுடியை ஒரு தீவு போல மாற்றி ஒரு புறம் காவேரி ஆற்றுக்கரை, மூன்று புரங்களில் புகை வண்டியினுடைய ரயில்வே கேட்டுகள் இடையிலே தவித்துக் கொண்டிருக்கின்ற $3\frac{1}{2}$ இலட்சம் மக்கள் பெருந்தலைவர் காமராஜர் வந்த போதும், புரட்சித் தலைவர் எம.ஜி.ஆர். வந்த போதும், இதய தெய்வம் நடமாடும் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வந்த போதும் அரை மணி நேரம் அங்கு காத்து நிற்க வேண்டிய ஒரு இழிநிலை ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே அவசரமாக கொடுமுடியை விட்டு வெளியே வரக்கூடிய

ஒரு சூழ்நிலை இல்லாமல் கர்ப்பிணிப் பெண் கூட அரை மணி நேரம் அங்கு காத்திருந்து ஒரு குழந்தையை பெற்றுவிட்ட ஒரு சூழ்நிலையிலே, பள்ளிக்கு விரைந்து செல்லக் கூடிய ஒரு மாணவன் தந்தையின் முன்னாலே மரணத்திற்கு ஆளாகக் கூடிய ஒரு இழி நிலையில் கொடுமுடியினுடைய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய கருணைக் கடாட்சம் 6½ கோடி மக்களுடைய இதயத்திலே நிறைந்திருக்கின்ற அந்த புரட்சித் தலைவியினுடைய கடைகோடிப் பார்வை கொடுமுடியின் மீது திரும்புமேயானால், ஒரு கோடி ரூபாயை ஒதுக்கினார்கள் என்றால் சுற்றுலா மையத்திற்கு அறிவித்திருக்கின்ற அந்தக் கொடுமுடி மாநகர் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கவிநிலவு தர்மராஜ், துணைக் கேள்வி கேளுங்கள்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: உலகம் பாராட்டக்கூடிய அளவிலே சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற அந்த கொடுமுடி மாநகர் 20 இலட்சம் மக்களை தினசரி சந்தித்துக் கொண்டிருக்கிறது, எனவே இல்லை என்று சொன்ன இந்தத் திட்டத்தை கருணை உள்ளத்தோடு அரசு மீண்டும் பரிசீலிக்குமா, அடுத்த ஆண்டிலாவது எங்களுக்கு விடிவு காலம் பிறக்குமா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த காலங்களில் நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். தற்போது அவர்கள் சொன்னதைப் போன்ற புகார்கள் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே அந்தப் பகுதியிலிருந்து வரவில்லை. இரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற நேரத்திலே இன்றைக்கு 75 இடங்களை தேர்வு செய்து இரயில்வேநிர்வாகம் நம்முடைய தமிழகஅரசுக்கு அனுப்பி இருக்கிறது. 50 சதவீதம் நாம் டணம் கொடுக்கின்றோம். இன்றைக்கு இவர் சொல்கின்ற அந்த மேம்பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 3 கோடி ரூபாய் செலவாகும். இன்றைக்கு முன்னுரிமைப் பட்டியலிலே அவர் குறிப்பிடுகின்ற அந்த கொடுமுடி நகரம் இடம் பெறாத காரணத்தினாலே—அந்த 75-ல் உள்ள பட்டியலில் அந்த கொடுமுடி நகரம் இடம்பெறவில்லை. ஆகவே நம்முடைய தமிழக அரசு அதை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதுகிறது. இருந்தாலும் எதிர்காலத்திலே அவர் சொல்லிய கோரிக்கைகளை மனதிலே வைத்து இரயில்வே நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டு அவர்களும் பாதிப் பணம் கொடுக்க வேண்டி இருக்கின்ற காரணத்தினாலே அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 443, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

443—

திருப்பத்தூர் அருகே புறவழிச்சாலை அமைத்தல்.

*5287 திரு. ஏ. கே. சுந்தரவேல் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் அருகே புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரத்தில் உள்ள சாலைகளில் போக்குவரத்து நெரிசல்கள் அதிகமாக உள்ளதால அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான விபத்திலிருந்து மக்களைச் காப்பாற்ற புற வழிச்சாலையை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்டது, இன்றைக்கு எல்லா பெரு நகரங்களிலும் இந்தக் கோரிக்கை எழுந்து கொண்டிருக் கிறது. ஆகவே, இதைவிட பெரிய நகரங்களுக்கு எல்லாம் முன்னு ரிமை கொடுத்து, இன்றைக்கு கோவை, மதுரை, போன்ற இடங்க ளிலே அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்றை க்கு இவர் சொல்லுகின்ற இடத்திலே ஏறத்தாழ 6 கிலோ மீட்டர் சாலை அமைக்க வேண்டியிருக்கிறது. 60 இலட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. உடனடியாக இந்தத் திட்டத்தை எடுத்துச் செய்வதற்கு நீதி ஆதாரம் இல்லாத காரணத்தால், இன்றைக்கு திருப்பத்தூர் மக்கள் நலனை கருத்தில் கொண்டு, கொண்டு வருங்காலத்தில் அதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS